# கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் (2024 )

## கல்லூரியில் ஊழலுக்கு எதிரான உறுதிமொழி ஏற்பு

திருவாடானை, அக்.29: திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பில், ஊழலுக்கு எதிரான உறுதிமொழி ஏற்பு நிகழ்வு நடைபெற்றது. கல்லூரி முதல்வர் பழனியப்பன் தலைமை தாங்கினார். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் மணிமேகலை, நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்திருந்தார். இதில் கலந்து கொண்ட கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் அனைவரும் ஊழலுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தி உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் கல்லூரி பேராசிரியர்கள் செல்வம், சுரேஷ், சரத்குமார், சொ.சரவணன், வீரபாண்டி, இருளவேணி மற்றும் மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## அரசுக் கல்லூரியில் மூன்றாம் பாலினத்தோர் விழிப்புணர்வு முகாம்

**திருவாடானை, அக். 25:** திருவாடானை அரசுக் கலை, அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப் பணித் திட்டத்தின் சார்பில் திருவாடானை வட்ட சட்டப்பணிக் குழு இணைந்து மூன்றாம் பாலினத்தோர் குறித்த விழிப்புணர்வு முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில், கல்லூரி முதல்வர் முனைவர் மு. பழனியப்பன் தலைமை வகித்தார். நாட்டு நலப் பணி திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் மணிமேகலை முன்னிலை வகித்தார்.

இதில், சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திருவாடானை குற்றவியல் நீதிபதி மணிஷ்குமார் மூன்றாம் பாலினத்தவர் நம்மில் ஒருவர் என்ற பொருளில் சிறப்புரையாற்றினார்.

கணிதத் துறை தலைவர் செல்வம் வாழ்த்தி பேசினார். மூன்றாம் பாலினத்தோர் சந்திக்கும் சிக்கல்கள் அவர்களுக்கான சட்டங்கள் குறித்து வழக்குறிஞர் குருமூர்த்தி பேசினர். இதில் வட்ட சட்டக் குழுவின் தன்னார்வலர் கோட்டைசாமி கௌரவ விரிவுரையாளர்கள் சரத்குமார் தொண்டியம்மாள் முனைவர் சொ. சரவணன், மாணவ மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆங்கிலத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் சு.சுரேஷ் நன்றி தெரிவித்தார்.




பல்கலைக்கழக அளவில் கலந்து கொண்டு கபாடிக் குழு



முதலமைச்சர் கோப்பை  கபாடி முதலிடம்









மாணவர்களுக்குக் கலைத் திறன் பயிற்சி



# அரசு கல்லூரியில் சட்ட விழிப்புணர்வு முகாம்

தொண்டி, செப்.27–

திருவாடானை அரசு கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் சட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் பொறுப்பு பழனியப்பன் தலைமை தாங்கினார். பேராசிரியர் மணிமேகலை முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் நீதிபதி மணிஷ் குமார், வக்கீல் ராம்குமார் கலந்துகொண்டு சட்டங்கள், தண்டனைகள் மற்றும் இலவச சட்ட உதவி மைய செயல்பாடுகள் குறித்தும் சட்ட விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.



கல்லூரி ஆய்வு



# சிறுதாணிய உணவு சமையல் போட்டி




3:46
46%
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருவாடானை
நாட்டு நலப்பணித் திட்டம்
(அலகு எண்-29)
தேசிய ஊட்டச் சத்து மாதம் 2024
சிறுதானிய சமையல் போட்டி
தேதி; 13.09.2024 , நேரம்; 10.00 TO 12.00, இடம்; கல்லூரி வளாகம்
அனைவருக்கும் சத்தான உணவுகள்

மாணவர்கள் தன் முன்னேற்றப் பயிற்சி





திருவாடானை அரசு கல்லூரியில் காவல் துறை சார்பில் சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தின நிகழ்வில் டி.எஸ்.பி. நிரேஷ்பழனிவேல் பேசிய போது எடுத்த படம்.

# போதை பழக்கத்தில் இருந்து மீட்க காவல்துறை உதவும்

## திருவாடானை டி.எஸ்.பி.பேச்சு

*திருவாடானை, ஜூன்.27—*

திருவாடானை அரசு கல்லூரியில் காவல் துறை சார்பில் சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தின நிகழ்ச்சி நடந்தது.

கல்லூரி முதல்வர் பழனியப்பன் வழிகாட்டுதலின்படி நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர் மணிமேகலை ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சிக்கு காவல் துறை டி.எஸ்.பி.நிரேஷ்பழனிவேல் தலைமை தாங்கினார். அவர் பேசுகையில், போதை பொருள் பல்வேறு வகையில் உள்ளது, அதை பயன்படுத்தி மாணவர்கள் தங்களது வாழ்வை சீரழித்துக் கொள்கின்றனர்.

ஒரு வேலை அப்படி போதைக்கு அடிமையாகி விட்டால் அதிலிருந்து மீள்வதற்கு காவல் துறை உதவுகிறது. எனவே அவ்வாறு பாதிக்கப்பட்ட நபரை மீட்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் ஹலோ போலீஸ் எண் 83000 31100 என்ற இலவச எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம் என்றார்.

இந்நிகழ்வில் சிறப்புரையாக சார்பு ஆய்வாளர் சுந்தரமூர்த்தி கலந்து கொண்டு பேசினார். கல்லூரி விரிவுரையாளர் சரவணன் வரவேற்றார்.

காவல் ஆய்வாளர் ஜெயபாண்டியன், கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். அனைத்து மாணவ மாணவிகளும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றுக் கொண்டார்கள். பேராசிரியர் மலர்விழி ரேகா நன்றி கூறினார்.

அதே போல் சின்ன கீரமங்கலம் தனியார் பள்ளியில் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பற்றிய ஓவியம், கட்டுரை போட்டி மாணவ, மாணவிகளிடையே நடந்தப்பட்டது. அதில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு டி.எஸ்.பி. நிரேஷ் பழனிவேல், பங்குதந்தை சேவியர் சத்திய மூர்த்தி பள்ளி தலைமை ஆசிரியர் அருட் சகோதரி அமல ஜெயராணி ஆகியோர் வழங்கினார்கள்.




ரிப்போர்ட்டர் எக்ஸ்பிரஸ்
ஆசிரியர்- DR. ஐயப்பன் BA LLB | து.ஆசிரியர் போதுராஜா 9787645830
BREAKING NEWS
இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை
அரசு கலை மற்றும் அறிவியல்
கல்லூரியி ல் கல்லூரி முதல்வர்
பழணியப்பன் தலைமையில் 78 வது
சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது...
இராமநாதபுரம் மாவட்ட செய்தியாளர்
இராமமூர்த்தி